**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**ஆலங்குடி.**

**<u>முன்னிலை:</u> திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**ஆலங்குடி(பொறுப்பு).**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ஆம் நாள் சனிக்கிழமை**

**<u>CC No.111/2023</u>**
**<u>(CNR.No : TNPD060005512023)</u>**

| | | |
|---|---|---|
| 1. **குற்றமுறையீட்டாளர்** | : | அரசுக்காக: காவல் உதவி ஆய்வாளர்,<br>சம்மட்டிவிடுதி காவல் நிலையம்.<br>குற்ற எண்.148/2022. |
| 2. **குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர் மற்றும் விலாசம்** | : | 1. அய்யப்பன் (வயது 35/2023),<br>த/பெ. முனியாண்டி.<br>2. முருகேசன் (வயது 43/2023),<br>த/பெ. ரெங்கசாமி.<br>3. குமார் (வயது 38/2023),<br>த/பெ. மருதமுத்து.<br>4. ராமராசு (வயது 30/2023),<br>த/பெ. ரெத்தினம்.<br>5. ஜோதி நாகூர் (வயது 21/2023),<br>த/பெ. மாரிமுத்து.<br><br>**<u>1, 3, 4 எதிரிகளின் முகவரி:</u>**<br>முல்லிக்கைப்பட்டி,<br>கந்தர்வக்கோட்டை தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br>**2 வது எதிரியின் முகவரி :**<br>கல்லக்கோட்டை,<br>கந்தர்வக்கோட்டை தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம்.<br>**5 வது எதிரியின் முகவரி :**<br>கோட்டைப்பட்டினம்,<br>புதுக்கோட்டை மாவட்டம். |



SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:55:46 +0530

| | | | |
|---|---|---|---|
| 3. | **குற்றம் நடந்த நாள்** | : | 14.09.2022 |
| 4. | **புகார் அளிக்கப்பட்ட நாள்** | : | 14.09.2022 |
| 5. | **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்** | : | 14.09.2022 |
| 6. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட நாள்** | | A1 to A5 – 24.11.2022 |
| 7. | **குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையில் வந்த நாள்** | | 1. 15.02.2023 (On Bail)<br>2. 17.02.2023 (On Bail)<br>3. 17.02.2023 (On Bail)<br>4. 21.02.2023 (On Bail)<br>5. 15.02.2023 (On Bail) |
| 8. | **குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்** | | 15.06.2023 |
| 9. | **குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு** | | **இ.த.ச பிரிவு 379.** |
| 11. | **வழக்கு விசாரணை தொடங்கப்பட்ட நாள் மற்றும் முடிக்கப்பட்ட நாள்** | : | 27.02.2024 – 20.01.2026 |

| | | **முதல் விசாரணை** | **குறுக்கு விசாரணை** |
|---|---|---|---|
| PW1 | – | 02.04.2024 | 02.04.2024 |
| PW2 | – | 18.06.2024 | 18.06.2024 |
| PW3 | – | 18.06.2024 | 18.06.2024 |
| PW4 | – | 18.06.2024 | 18.06.2024 |
| PW5 | – | 03.09.2024 | 03.09.2024 |
| PW6 | – | 03.12.2024 | 20.01.2026 |
| PW7 | – | 03.12.2024 | 03.12.2024 |

**12. நீதிமன்றத்தின் முடிவு** : **இறுதியாக,** எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவு 379 இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் தகுந்த சாட்சிய, சான்றவாணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் 1 முதல் 5 எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து 1, 5 எதிரிகளுக்கு 84 நாட்கள் சிறை



SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:55:56 +0530

தண்டனையும், 2, 3 எதிரிகளுக்கு 86 நாட்கள் சிறை தண்டனையும், 4 வது எதிரிக்கு 90 நாட்கள் சிறை தண்டனையும் அளித்து கு.வி.மு.ச. பிரிவு 248(2) இன் கீழ் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் 1, 5 எதிரிகள் ஏற்கனவே (24.11.2022 முதல் 15.02.2023 ஆம் தேதி வரை) 84 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளதாலும், 2, 3 எதிரிகள் ஏற்கனவே (24.11.2022 முதல் 17.02.2023 ஆம் தேதி வரை) 86 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளதாலும், 4 வது ஏற்கனவே (24.11.2022 முதல் 21.02.2023) வரை 90 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளதாலும் அதனை அவர்களது தண்டனை காலத்திலிருந்து கழித்துக்கொள்ள கு.வி.மு.ச.பிரிவு 428 இன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

**13. வழக்கு சொத்துக்கள்** : இல்லை.

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ரஜினி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்.....

## <u>தீர்ப்புரை</u>

அரசு தரப்பில் 1 முதல் 5 எதிரிகளின் மீது இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 379 இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***இனிமுதற்கொண்டு இந்திய தண்டனைச்சட்டம் என்பது இ.த.ச. என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் என்பது கு.வி.மு.ச. என்றும் அழைக்கப்படும்.***



SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:56:07 +0530

**1) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதியறிக்கையின் சுருக்கம் :**

இவ்வழக்கின் வாதி ஆறுமுகம் என்பவர் கடந்த 14.09.2022 ஆம் தேதி இரவு தனக்கு சொந்தமான சுமார் 40 வெள்ளாடுகளை தனது ஆட்டுப்பட்டியில் அடைத்து வைத்திருந்த 10 வெள்ளாடுகளை எதிரிகள் ஐந்து பேரும் சேர்ந்து சுயலாபம் அடையும் நோக்கில் திருடிச்சென்றுள்ளனர். எனவே, எதிரிகளின் செய்கையானது இ.த.ச பிரிவு 379 இன் கீழும் தண்டிக்கதக்க குற்றம் என காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்

**2) வழக்கினை கோப்பிற்கு எடுத்தல், அழைப்பாணை, நகல் வழங்குதல் :**

இந்நீதிமன்றத்தால் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கை மற்றும் வாக்குமூலங்கள், ஆவணங்கள் போன்றவைகளை கவனமாக பரிசீலனை செய்ததில், 1 முதல் 5 எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு உள்ளதென இந்நீதிமன்றம் கருதியதால், வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 1 முதல் 5 எதிரிகளுக்கு **கு.வி.மு.ச. பிரிவு 204** இன் கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

அழைப்பாணையின் பேரில் 1 முதல் 5 எதிரிகள் ஆஜரானதும், **கு.வி.மு.ச. பிரிவு 207** இன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டது.

**3) குற்றச்சாட்டு வனைதல் மற்றும் எதிரிகளின் பதில் :**

பின்பு எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் இ.த.ச.பிரிவு 379–இன் கீழ் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரம் உள்ளதென கருதியதால், எதிரிகள் மீது **கு.வி.மு.ச.பிரிவு 240(1)** இன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து **கு.வி.மு.ச.பிரிவு 240(2)** இன் கீழ் எதிரிகளிடம் தமிழில் விளக்கி கூறி வினவிய போது, 1 முதல் 5 எதிரிகள் பொய் வழக்கு என்று மறுத்துரைத்து வழக்கு


SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:56:14 +0530

விசாரணைக்கு வேண்டுரைத்தனர். எனவே இந்நீதிமன்றமானது **கு.வி.மு.ச.பிரிவு 242(1)** இன் கீழ் அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிட்டது.

**4) அரசு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :**

**4.1) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7** வரையிலான சாட்சியங்களும், **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11** வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4.2) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 ஆறுமுகம் 40 வெள்ளாடுகள் வளர்த்து வந்ததாகவும், மேற்படி ஆடுகளில் கடந்த 13.09.2022 ஆம் தேதி இரவு 10 மணிக்கு ஆடுகளுக்கு தண்ணீர் வைத்துவிட்டு திரும்ப சென்று மறு நாள் 14.09.2022 அன்று காலை 5 மணியளவில் எழுந்து பார்த்தபோது 10 வெள்ளாடுகள் காணாமல் போய்விட்டதாகவும், பின்பு ரமேஷ் மற்றும் மணிகண்டன் இரவு 9 – 10 மணி வரை TN 10 Y 3137 என்ற பதிவெண் கொண்ட Innova சாம்பல் நிற கார் சுற்றி வந்ததாகவும், அதனை இரண்டு முறை அவர்கள் பார்த்தாக கூறியதன் பேரில் அ.சா.1 புகாரினை அளித்து அதன்பேரில் **அ.சா.ஆ.5** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கு புலன்விசாரணையில் இருந்தபோது 24.11.2022 ஆம் தேதி 11.30 மணியளவில் இச்சடி என்ற இடத்தில் வாகன சோதனையில் இருந்தபோது எதிரிகளின் சந்தேகப்படியான போக்கினை பார்த்து விசாரித்தபோது எதிரிகள் தானாக முன் வந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அதன்பேரில் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிக்கையொப்பம் செய்த அ.சா.4 சாட்சியின் மூலம் வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதாகவும், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1 ஆகவும், கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2 மற்றும் அ.சா.3 எதிரிகளின் Innova சாம்பல்நிற காரை குறிப்பிட்ட நபர்களாகவும், பார்வை மகஜர் சாட்சி அ.சா.4 ஆகவும், வழக்குச்சொத்துக்களான ஆடுகள் மற்றும் கார் பறிமுதல் செய்த சாட்சிகள் அ.சா.5



SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:56:21 +0530

மற்றும் அ.சா.6 ஆக விசாரணை செய்யப்பட்டும், எதிரிகளின் இடத்திலிருந்து 48 ஆடுகளிலிருந்து இவ்வழக்கில் காணாமல் போன 10 ஆடுகள் நிகழ்நிலை புகார்தாரர்தான் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அதனை இந்நீதிமன்றத்தில் மனு செய்தபின்னர் அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், பார்வை மகஜர், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி, படிவம் 91 ஆகியவை **அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.9 வரை** குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>5) கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) இன் கீழான வினா மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சியம்:</u>**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டவுடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றுகின்ற அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் **கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)** இன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரிகள் பொய் வழக்கு என்றும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் பதிலுரைத்ததால், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6) <u>அரசு தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு வாதம்</u>:

**6.1)** அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கின் அ.சா.1 நிகழ்நிலை புகார்தாரரின் தனது புகாரில் காணாமல் போனதாக கூறப்பட்ட 10 ஆடுகள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டு அ.சா.1 இன் வசம் இந்நீதிமன்றத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ.1 புகாரிலேயே இந்நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டுள்ள TN 10 Y 3157 என்ற பதிவெண் கொண்ட சில்வர் கலர் Innova காரை அ.சா.2 மற்றும் அ.சா.3 சம்பவ இடத்தில் பார்த்தாக கூறப்பட்டுள்ளதும், பின்பு அ.சா.6 புலன் விசாரணை அதிகாரியிடம் இவ்வழக்கின் எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து Confession leads to recovery என்பதன்



SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:56:32 +0530

மூலம் வழக்குச்சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியில் கையொப்பம் செய்த அ.சா.4 இன் சாட்சியம் ஆகியவை அரசு தரப்பில் தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார். மேலும், எதிரிகள் செய்த குற்ற செய்கையானது இ.த.ச.பிரிவு 379 இன் கீழ் தவறான உள்நோக்கத்துடன் பிற நபரின் பொருளை அவரின் அனுமதியின்றி தவறான நோக்கத்தில் சுய லாபம் அடையும் நோக்கில் என்ற விதத்தில் அ.சா.1 இன் ஆடுகளை திருடிச்சென்றுள்ளதால் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் வாதிட்டார்.

6.2) எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கானது எதிரிகள் மீது ஜோடிக்கப்பட்ட வழக்காகும். அரசு தரப்பு சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்துள்ளனர் என்றும், அ.சா.4 கைப்பற்றுதல் மகஜர் மற்றும் எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்த சாட்சியாவார் என்றும், மேற்கண்டவை சட்டத்திற்கு முரணாகும் என்றும், காவல்துறையினரின் பாதுகாப்பில் இருக்கும்போது அளிக்கப்பட்ட வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டப்படி தடைசெய்யப்பட்ட ஒன்றாகும் என்றும், இவ்வழக்கில் அரசு தரப்பில் எத்தனை ஆடுகள் காணாமல் போனது, எத்தனை ஆடுகள் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிட்டார்

**7) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1 முதல் 5 எதிரிகளின் மீதான இ.த.ச பிரிவு 379–இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.**



SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:56:39 +0530

**<u>8) சாட்சியங்களின் பரிசீலனை மற்றும் பகுப்பாய்வு:</u>**

9) இருதரப்பு வாதங்களும் வழக்கின் சாட்சியங்களும், சான்றாவணங்களும் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

10) 1 முதல் 5 எதிரிகளின் மீதான இ.த.ச பிரிவு 379–இன் கீழான குற்றச்சாட்டு குறித்த அரசு தரப்பு சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் அ.சா.1 நிகழ்நிலை புகார்தாரர் தனது புகாரில் கடந்த 13.09.2022 ஆம் தேதி இரவு 10 மணிக்கு ஆடுகளுக்கு தண்ணீர் வைத்துவிட்டு தூங்க சென்றுவிட்டு மறுநாள் 14.09.2022 ஆம் தேதி காலை 5 மணியளவில் ஆட்டுக்கொட்டகைக்கு சென்று பார்த்தபோது 10 ஆடுகளை காணவில்லை என்றும், பின்பு விசாரித்தபோது அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகள் சம்பவ இடத்திற்கு அருகாமையில் ஒரு சில்வர் நிற Innova Car சுற்றி வந்ததாகவும், புகார் கொடுக்கப்பட்டு அதற்கு ஆதரவாக புலன் விசாரணையில் சாட்சியமளித்துவிட்டு பின்பு இவ்வழக்கின் எதிரிகள் அ.சா.4 இன் முன்பு அளிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட 10 ஆடுகளை இந்நீதிமன்றத்தின் மூலம் Crmp.No.2468/2023 இன் கீழ் மனு தாக்கல் செய்து 12.06.2023 அன்று அளிக்கப்பட்ட உத்தரவின்பேரில் ஆடுகளை அ.சா.1 பெற்று சென்றுள்ளது தெரியவருகிறது. மேலும், அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட TN 07 BC 2696 என்ற வாகனத்தை Crmp.No.2473/2023 இன் கீழ் இந்நீதிமன்றத்தால் 15.06.2023 ஆம் தேதி வழங்கப்பட்ட உத்தரவுப்படி அதன் உரிமையாளர் பெற்றுக்கொண்டுள்ளது தெரியவருகிறது.

11) மேலும், ஏற்கனவே அ.சா.ஆ.1 புகார் ஆவணத்தில் நிகழ்நிலைப்புகார்தாரர் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட சில்வர் நிற Innova Car–ஐ அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகள் சம்பவ நேரத்திற்கு முன்பு பார்த்தாக கூறியுள்ளனர். அதற்கு ஆதரவாக புலன்



SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:56:45 +0530

விசாரணை அதிகாரியும் எதிரியிடமிருந்து மேற்படி சில்வர் நிற Car–ஐ கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ள கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.9 ஆகவும், ஆர்.பி.எண்.90/2023 இல் கண்ட TN 10 Y 3137 என்ற பதிவெண் கொண்ட Innova car–இன் புகைப்படம் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12) அரசு தரப்பில் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ள கைப்பற்றுதல் மகஜர் மற்றும் எதிரிகள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்த சாட்சி கீழ்க்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

> ***"நான் கூழையான்விடுதி கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்போது சென்னையில் தனியார் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். <u>என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான்.</u> கடந்த 2022 ஆம் வருடம் நவம்பர் மாதம் தேதி சரியாக ஞாபகம் இல்லை. ஒருநாள் காலை சுமார் 9.00–9.30 மணிப்போல எனது ஊருக்கு செல்வதற்காக நானும் என் நண்பர் சரத்குமார் என்பரும் இச்சடி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தோம். அப்போது போலிசார் <u>இரண்டு கார்களை நிறுத்தி விசாரித்து கொண்டிருந்தார்கள்.</u> அங்கு கூட்டமாக இருந்தது. நானும் என் நண்பர் சரத்குமாரும் அங்கு சென்று பார்த்தோம். அங்கு மொத்தம் 5 நபர்கள் இருந்தார்கள். அங்கு சுவிட் டிசையர் காரும் <u>யுனோவா காரும்</u> நின்று கொண்டிருந்தது. அந்த 5 நபர்களிடம் சம்மட்டிவிடுதி போலிசார் விசாரித்தார்கள். அந்த 5 நபர்களில் 2 நபர்களின் பெயர்கள் மட்டும் எனக்கு தற்போது ஞாபகத்தில் உள்ளது. அது <u>அய்யப்பன், குமார்</u> என்ற பெயர்கள் ஆகும்.***
>
> ***அதில் அய்யப்பன் என்பவரை போலிசார் விசாரித்தபோது அவர் வம்பன், மாங்காடு, சேந்தாங்குடி, கூழையான்விடுதி ஆகிய பகுதிகளில் உள்ள ஆடுகளை நாங்கள்தான் காரில் சென்று திருடியதாக ஒப்புக்கொண்டார். <u>எதிரி அய்யப்பன் சொன்ன வாக்குமூலத்தை போலிசார் டைப் செய்து அருகில் சென்று பிரிண்ட் எடுத்து வந்து கையொப்பம் கேட்டார்கள்.</u> அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், என் நண்பர் சரத்குமாரும் கையொப்பம்***

***செய்தோம். அதன் பிறகு எங்களை எதிரி அய்யப்பன் என்பவரது ஊரான முள்ளிக்காப்பட்டி என்ற ஊருக்கு அழைத்து சென்று எதிரி அய்யப்பன் வீட்டில் உள்ள தொழுவத்தில் கட்டி வைத்திருந்த 46-48 ஆடுகளை போலிசார் கைப்பற்றினார்கள். அந்த இரண்டு கார்களையும் போலிசார் பறிமுதல் செய்தார்கள். சுவிட் காரின் பதிவு எண். TN 07 2696 மற்றும் யுனோவா காரின் பதிவு எண். TN 10 3137 ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் என் நண்பர் சரத்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி அய்யப்பன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.11.2022 தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தின்போது போலிசார் விசாரித்த 5 நபர்களையும் என்னால் நேரில் பார்த்தால்அடையாளம் காட்ட முடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள 2 எதிரிகளும் (3வது எதிரி குமார், 4வது எதிரி ராமராஜ்) நான் சம்பவத்தின்போது பார்த்த நபர்கள்தான். போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்"***

மேற்படி சாட்சியத்தின்படி அ.சா.2 மற்றும் அ.சா.3, அ.சா.ஆ .1 புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சில்வர் நிற Innova கார் ஆன, அ.சா.ஆ.10 புகைப்படத்தில் உள்ள வாகனம் என்பதனை நிரூபணம் செய்யும் வகையிலும், எதிரிகளிடமிருந்து அரசு தரப்பில் எடுத்துரைக்கப்பட்டுள்ள வாகனம் மற்றும் ஆடுகளை அ.சா.4 சாட்சியின் முன்னிலையில் கைப்பற்றப்பட்டுள்ளது தெரியவருகிறது.

13) அ.சா.1 மற்றும் அ.சா.4 இன் சாட்சியத்தின்படி ஒருவருக்கொருவர் ஆதரவாக சாட்சியமளித்துள்ளனர். அ.சா.5 பார்வை மகஜர் சாட்சியாவார். அவரது சாட்சியத்தில் எவ்வித முரண்பாடும் இல்லை. அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி ஆவார். அ.சா.7 இவ்வழக்கின் இறுதிகட்ட விசாரணையை முடித்த புலன் விசாரணை அதிகாரி. அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி கைப்பற்றிய ஆடுகள் மற்றும் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்தது பற்றி மட்டுமே சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.2 மற்றும் அ.சா.3 இன் மூலம் எதிரிகள் பயன்படுத்தியதாக கூறப்படும் கார் அ.சா.ஆ.10-இல் குறியீடு செய்யப்பட்டுள்ள புகைப்படம், அ.சா.4 முன்பு



SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:57:19 +0530

வழக்குச்சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது. அதற்கு ஆதரவாக பார்வை மகசர் சாட்சிகள், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சிகள் உள்ளதால் எதிரிகள் மீது வனையப்பட்ட இ.த.ச.பிரிவு 379 இன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14) எதிரிகள் இ.த.ச.பிரிவு 379 இன் கீழான குற்றச்சாட்டின்படி குற்றவாளிகள் என தீர்மானித்து குற்ற தண்டனை குறித்து எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் "ஏற்கனவே நாங்கள் சிறையிலிருந்த காலத்தையே தண்டனையாக அளிக்க வேண்டும் என்றும், எதிரிகள் குடும்பம் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளதாகவும், அதனால் அபராதம் விதிக்க வேண்டாம்" என்றும் எடுத்துரைத்தனர். மேற்கொண்டவை கருத்தில் கொள்ளப்பட்டது. எதிரிகள் செய்த குற்றமானது 2 வருடத்திற்கும் மேலான சிறை தண்டனை அளிக்கக்கூடிய குற்றமாக இருப்பதால் நன்னடத்தை சட்டத்தின் கீழான பலனை எதிரிகளுக்கு அளிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,** எதிரிகள் மீதான இ.த.ச.பிரிவு 379 இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் தகுந்த சாட்சிய, சான்றவாணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் 1 முதல் 5 எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து 1, 5 எதிரிகளுக்கு 84 நாட்கள் சிறை தண்டனையும், 2, 3 எதிரிகளுக்கு 86 நாட்கள் சிறை தண்டனையும், 4 வது எதிரிக்கு 90 நாட்கள் சிறை தண்டனையும் அளித்து கு.வி.மு.ச. பிரிவு 248(2) இன் கீழ் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் 1, 5 எதிரிகள் ஏற்கனவே (24.11.2022 முதல் 15.02.2023 ஆம் தேதி வரை) 84 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளதாலும், 2, 3 எதிரிகள் ஏற்கனவே (24.11.2022 முதல் 17.02.2023 ஆம் தேதி வரை) 86 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்துள்ளதாலும், 4 வது எதிரி ஏற்கனவே (24.11.2022 முதல் 21.02.2023) வரை 90 நாட்கள் நீதிமன்ற



SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:57:26 +0530

காவலில் இருந்துள்ளதாலும் அதனை அவர்களது தண்டனை காலத்திலிருந்து கழித்துக்கொள்ள கு.வி.மு.ச.பிரிவு 428 இன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

அ) வழக்குச்சொத்தான ஆர்.பி.எண்.90/2023 இல் உள்ள Item 1) TN 07 BC 2696 என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற Swift Dzire Car ஒன்றினை அதன் உரிமையாளரான வெங்கடேசன் என்பவர் நீதிமன்றத்தில் மனு செய்து Crmp.No.2473/2023 இல் 15.06.2023 ஆம் தேதி அளித்த உத்தரவின்பேரில் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். மேற்படி வாகனத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அதன் உரிமையாளர் தன்வசமே வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

ஆ) வழக்குச்சொத்தான ஆர்.பி.எண்.90/2023 இல் உள்ள Item 2) TN 10 Y 3137 என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற Innova Car ஒன்றினை அதன் உரிமையாளர் மேல்முறையீட்டு காலத்திற்குள் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்று கொள்ளலாம் என்றும் தவறும்பட்சத்தில் அதனை அரசிற்கு ஆதாயம் செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இ) வழக்குச்சொத்தான ஆர்.பி.எண்.90/2023 இல் உள்ள Item 3) 10 வெள்ளாடுகளை அதன் உரிமையாளரான அ.சா.1 ஆறுமுகம் என்பவர் நீதிமன்றத்தில் மனு செய்து Crmp.No.2468/2023 இல் 12.06.2023 ஆம் தேதி அளித்த உத்தரவின்பேரில் இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். மேற்படி ஆடுகளை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அதன் உரிமையாளர் தன்வசமே வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

ஈ) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரிகளால் எழுதி கொடுக்கப்பட்ட பிணையப் பத்திரங்கள் ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த



SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:57:31 +0530

பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:55:21 +0530

**மாவட்ட உரிமையியல்**
**மற்றும் நீதித்துறை நடுவர்,**
**ஆலங்குடி.(பொறுப்பு).**

**<u>சாட்சி மற்றும் சான்றாவணப்பட்டியல் :</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

**அ.சா.1** : ஆறுமுகம்

**அ.சா.2** : ரமேஷ்

**அ.சா.3** : மணிகண்டன்

**அ.சா.4** : ராமசுப்பிரமணியன்

**அ.சா.5** : கிருஷ்ணமூர்த்தி

**அ.சா.6** : கலைச்செல்வன் (காவல் உதவி ஆய்வாளர்)

**அ.சா.7** : சமுத்திரராஜன் (காவல் உதவி ஆய்வாளர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

**அ.சா.ஆ.1** : புகார் மனு

**அ.சா.ஆ.2** : 10 ஆடுகளை காட்டக்கூடிய புகைப்படம்

**அ.சா.ஆ.3** : ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.4 இன் கையொப்பம்

**அ.சா.ஆ.4** : கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.4 இன் கைொயப்பம்

**அ.சா.ஆ.5** : பார்வை மகஜர்

**அ.சா.ஆ.6** : முதல் தகவல் அறிக்கை

**அ.சா.ஆ.7** : மாதிரி வரைபடம்



SAKTHINARAYANA MOORTHI S
Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:57:41 +0530

| | | |
|---|---|---|
| **அ.சா.ஆ.8** | : | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| **அ.சா.ஆ.9** | : | கைப்பற்றுதல் மகஜர் |
| **அ.சா.ஆ.10** | : | படிவம் 91 |
| **அ.சா.ஆ.11** | : | TN 07 BC 2696 என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற சுவிப்ட் டிசையர் காரினை காட்டும் புகைப்படம் |
| **அ.சா.ஆ.11** | : | TN 10 Y 3137 என்ற பதிவெண் கொண்ட சில்வர் நிற யுனோவா காரினை காட்டும் புகைப்படம் |

**சான்று பொருட்கள் :** இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை.

**பின்குறிப்பு :**

1. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் எதிரிகள் விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.07 03:55:30 +0530

**மாவட்ட உரிமையியல்**
**மற்றும் நீதித்துறை நடுவர்,**
**ஆலங்குடி.(பொறுப்பு).**

Draft / Fair Judgment
Dm cum JM Court, Alangudi.
CC.No.111/2023
Dated : 07.03.2026